சுருக்கம்

பொதுப்பணித்துறை – கட்டடம் – வேலூர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், கட்டிட கட்டுமான கோட்டத்தை அதனை சார்ந்த உபகோட்டங்களுடன் பணிப் பெயர்ச்சி அடிப்படையில் சென்னை, கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்திற்கு ‘‘கட்டிட கட்டுமான கோட்டம் எண் 2, சென்னை’’ என மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ஜி1) த்துறை

அரசாணை (நிலை) எண் 76

நாள் 5.3. 2010
மாசி 21
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:–

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5
கடித எண்.உசெபொ/டி10/38232/2009, நாள் 24.9.2009.

ஆணை:

தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்கள் பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் கண்காணிப்புப் பொறியாளர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னை கட்டுப்பாட்டில்(1) செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானக் கோட்டம்–1, சென்னை, (2)செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானக் கோட்டம்–2, சென்னை, (3)செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானக் கோட்டம்–3, சென்னை, (4)செயற்பொறியாளர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், காஞ்சிபுரம், (5) செயற்பொறியாளர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், திருவள்ளூர் ஆகிய கோட்டங்கள் இயங்கி வருகின்றன என்றும், இதில் செயற்பொறியாளர், கட்டிட கட்டுமான கோட்டம்–2 (சென்னை) பணிப் பெயர்ச்சி அடிப்படையில் தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை வளாக கட்டுமானக் கோட்டமாக (Block-A) 1.11.2008 முதல் அரசாணை (நிலை) எண்.288, பொதுப்பணித்துறை, நாள் 12.9.2008ன்படி இயங்கி வருகின்றது என்றும், இது கண்காணிப்புப் பொறியாளர், கட்டிட கட்டுமான வட்டம், புதிய சட்ட மன்றப்பேரவை வளாகம், சென்னை அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், இந்நிலையில் செயற்பொறியாளர், கட்டிட கட்டுமான கோட்டம்–3 அவர்களின் மேற்பார்வையில் ரூ.271.00 கோடி மதிப்பீட்டில் 8 பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் தவிர ரூ.111.40 கோடி மதிப்பிலான 2 பணிகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இப்பணிகளை காலதாமதமின்றி தொடர்ந்து முடிக்க ஏதுவாக கூடுதலாக ஒரு கோட்டம் உபகோட்டங்களுடன் அத்தியாவசியமாகின்றது என்றும் எனவே பணிச்சுமை சற்று குறைவாக உள்ள வேலூர் கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர் கட்டிட கட்டுமான கோட்டத்தை அதனை சார்ந்த உபகோட்டங்களுடன் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் சென்னை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்திற்கு ‘‘கட்டிட கட்டுமான கோட்டம் எண்.2, சென்னை’’ என மாற்றம் செய்து ஆணையை பெற்றுத்தருமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கருத்துருவினை ஏற்று 'பணி மாறுதல் பயணப்படி' (Transfer Travelling Allowance) தவிர மற்ற கூடுதல் செலவினங்கள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது மற்றும் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்ட பணியாளர்கள் தவிர கூடுதல் பணியாளர்களை உருவாக்கக் கூடாது என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும் வேலூரார் கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர் கட்டிட கட்டுமான கோட்டத்தை அதனை சார்ந்த உபகோட்டங்களுடன் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் சென்னை, கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்திற்கு ''கட்டிட கட்டுமான கோட்டம்–2 சென்னை'' என இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 11755/ PW I/10 நாள் 3.3. 2010 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை –5
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை–18/35
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5
கருவூல அலுவலர், வேலூர்
<u>நகல்:–</u>
நிதி (பொ.ப I) துறை, சென்னை–8
இருப்பு கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண் 76, பொதுப்பணி (ஜி1) த்துறை, நாள் 5.3. 2010ன் பிற்சேர்க்கை

அரசாணை (நிலை) எண்.14, பொப.(ஜி1)த்துறை நாள் 11.1.2010 இன் பிற்சேர்க்கை–IVல் 1.1.2009 முதல் 31.12.2010 வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள தற்காலிக பணியிடங்களுடன், வேலூரார் கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர் கட்டிட கட்டுமான கோட்டத்தை அதனை சார்ந்த உபகோட்டங்களுடன் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் சென்னை, கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டத்திற்கு ''கட்டிட கட்டுமான கோட்டம்–2 சென்னை'' என மாற்றம் செய்யப்படும் பணியிடங்களின் விவரங்கள்:–

| வரிசை எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | நிரந்தரம் | தற்காலிகம் |
| 1. | செயற்பொறியாளர் | | 1 |
| 2. | செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர் | | 1 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | | 3 |
| 4. | உதவி பொறியாளர் /இளநிலை பொறியாளர் | | 10 |
| 5. | கோட்ட கணக்கர் | | 1 |
| 6. | கண்காணிப்பாளர் | | 2 |
| 7. | உதவியாளர் | | 11 |
| 8. | இளநிலை உதவியாளர் | | 4 |
| 9. | தட்டச்சர் | | 2 |
| 10. | பதிவுரு எழுத்தர் | | 1 |
| 11. | முதுநிலை வரைத்தொழில் அலுவலர் | | 1 |
| 12. | இளநிலை வரைத்தொழில் அலுவலர் | 2 | 2 |
| 13. | உதவி வரைத்தொழில் பணியாளர் (Asst.D'Man) | | 1 |
| 14. | ஓட்டுனர் | | 1 |
| 15. | அலுவலக உதவியாளர் | | 10 |
| 16. | காவலர் (watchman) | | 1 |
| | மொத்தம் | 2 | 52 |

.// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்